(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 126.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2011 செத்தெம்பர் 23, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0330/ '10

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கடந்த 20 வருடங்களில் நெடுஞ்சாலைகளை நிருமாணிப்பதற்காக வருடாந்தம் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளினளவை வெவ்வேறாகவும்,

(ii) அவற்றுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத்தொகையின் அளவு என்னவென்பதையும்,

(iii) அதில் இதுவரையில் செலுத்தி முடிந்துள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(iv) இன்னும் செலுத்துவதற்காக எஞ்சியுள்ள தொகையினளவு என்ன என்பதையும்,

(v) அவை எப்பொழுது செலுத்தி முடிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0763/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) எயார் லங்கா தனியார்மயப்படுத்தப்பட்ட திகதி மற்றும் அதன் பெறுமதி என்ன என்பதையும்;

(ii) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் பங்குகளை மீளப் பெற்றுக்கொண்ட திகதி மற்றும் அதற்காக ஏற்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) முகாமைத்துவம் கையேற்கப்பட்டதில் இருந்து, ஸ்ரீ லங்கன் எயார்லைன்சுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஸ்ரீ லங்கன் எயார் லைன்சால் பெறப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கடன் பெறப்பட்ட திகதிகள் மற்றும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் என்ன என்பதையும்;

(iii) 2010-2017 காலப்பகுதிக்கான ஸ்ரீ லங்கன் எயார் லைன்சின் கடன் மீள்செரலுத்துகையை வருடாந்த அடிப்படையிரும்;

(iv) 2005-2011 காலப்பகுதிக்கான ஸ்ரீ லங்கா எயார் லைன்சின் இலாப, நட்டம் எவ்வளவு என்பதையும்;

(v) கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் தரையில் செய்யப்பட்ட கையாளுதல்களின் மூலம் பெறப்பட்ட வருமானம் வருடரீதியாக எவ்வளவு என்பதையும்;

(vi) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தொடர்பாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதம் பற்றிய விபரங்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0801/ '10

3\.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(iv) ஆசிரியர் மிகை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1215/ '11

4\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சனாதிபதி நிதியத்துக்கு எவ்வாறு நிதி உதவிகள் கிடைக்கின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில்,

(i) சனாதிபதி நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த நிதியத்தினால் வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iii) சனாதிபதி நிதியத்தினால் உதவிகள் வழங்கப்படும் துறைகள் மற்றும் ஒவ்வொரு துறைக்காக வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iv) நிதி உதவிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1539/ '11

5\.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட புஸ்செல்கட மாதிரி கனிஷ்ட வித்தியாலயத்தில் 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும்,

(i) அந்தந்த தரங்களிலிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004ஆம் ஆண்டின் பின்னர் மேற்படி பாடசாலை முன்னேற்றம் கண்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அந்த முன்னேற்றத்திற்கு காரணமான விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1542/ '11

6.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில் தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான தம்புல்ல நகர மத்தியில் ஓடும் தம்மென்னா கால்வாவை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) தம்மென்னா கால்வாய் விரிவாக்கல் தொடர்பாக பிரதேச வாசிகள் அறிவூட்டப்பட்டனரா என்பதையும்;

(iv) கால்வாய் விரிவாக்கப்படுவதனால் கால்வாயின் இருபக்கத்திலுமுள்ள பெரும்பாலான குடியிருப்பாளர்களின் உரித்துரிமைக் காணித் துண்டுகளையும் இக்காணிகளிலிருந்த பெறுமதிமிக்க மரங்களையும் இழந்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின் இக்குடியிருப்பாளர்களுக்கு இதற்கான நட்டஈடொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் அதற்குத் தேவைப்படும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

1616/ '11

7.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் கெகிராவ, கனேவல்பொல பிரதேசத்தில் கடுமையாக குடிநீர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) அப்பிரதேசத்தின் ஊற்று நீர் மற்றும் கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என சுகாதார உத்தியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கலாவெவ நீர் விநியோகத்திட்டத்தின் கீழ், நீர் குழாயிடல் பணிகள் மேலே குறிப்பிட்டுள்ள பிரதேசத்தின் கிராமங்களை உள்ளடக்குகின்றவாறு விஸ்தரிக்கப்படாமையினால் அப்பிரதேச மக்கள் சுத்தமான குடி நீரைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) ஆமெனில், அம்மக்களின் குடி நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரிதமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0770/ '10

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009, 2010 ஆகிய ஆண்டுகளில்,

(i) மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பல்வேறு வகைப் பிரிவுகளின் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையையும்;

(iii) வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையிலும்;

(iv) அனுமதிப்பத்திர விநியோகத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்;

(v) அனுமதிப்பத்திரங்கள் ஏதும் இரத்துச் செய்யப்பட்டனவா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்ட வகைகளின் பெயர்கள் யாதென்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0812/ '10

9\.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் கொட்டபொல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0984/ '10

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வில்பத்து சரணாலயத்தில் மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அந்த உரிமப் பத்திரத்தை வழங்கிய அதிகாரி யார் என்பதையும்;

(iv) அந்த உரிமப் பத்திரம் மூலம் மணல் அகழ்வதற்கு அனுமதி பெற்றுள்ள நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த சரணாலயத்திலிருந்து இதுவரை அகற்றப்பட்டுள்ள மணலின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த மணல் எந்தப் பணிகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1217/ '11

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1193/ '11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருடங்களுக்கான செத்தல் மிளகாயின் மொத்த நுகர்வு மற்றும் தலைக்குரிய நுகர்வு எவ்வளவு என்பதையும்;

(ii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட செத்தல் மிளகாயின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் 1கி.கி. செத்தல் மிளகாய்க்கான உற்பத்திச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(vi) அரசாங்கத்தினால் செத்தல் மிளகாய்க்கு உண்மையில் வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு என்பதை தகுந்த ஆதாரத்துடனும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற 1 கி.கி. செத்தல் மிளகாய்க்கு விதிக்கப்படுகின்ற சகல வரிகள் (நேரடி, மறைமுக) எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1271/ '11

13.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நிதி, திட்டமிடல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1275/ '11

14\.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பெரகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள சமூக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டிருப்பதால் பிரதேச மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சமூக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளுக்கு நிதி வழங்குகின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(ii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தை நிறுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

(iv) அதன் நிர்மாணிப்புப் பணிகள் தொடர்பாகவுள்ள தடைகளை நீக்கி நிர்மாணிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து மக்களின் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இசசபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1340/ '11

15\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் இலவசமாக பாடசாலை சீருடை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் 2011ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறின்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) வழங்கப்படாத சீருடைகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2011, ஒற்றோபர் மாதம் 06ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

19.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0811/ '10

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய கொட்டபொல கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்களையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்களையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0813/ '10

2.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் பஸ்கொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0815/ '10

3.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய தெவிநுவர கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசிகளின் இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மூடுவதற்காக தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1151/ '11

4.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும்,

(i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான சகல வருடங்களிலும் யூன் மாதம் 30 ஆம் திகதி வரை உரித்துரிமை பெற்றிருந்த சமுர்த்திப் பயனுகரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை சமுர்த்திப் பயனுகரிகளின் சார்பாக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை சமுர்த்திப் பயனுகரிகளாகவிருந்து பின்னர் நீக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) இவ்வாறு நீக்கப்பட்டிருந்தால் இவர்கள் நீக்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்

(v) 2010 யூன் மாதத்தின் பின்னர் சமுர்த்திப் பயனுகரிகளாக புதிதாக சேர்க்கப்பட்டோரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1156/ '11

5\.

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில்,

(i) சிறு தேயிலைப் பயிர்ச் செய்கை நிலங்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தோட்ட உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு உர மானியம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒரு ஹெக்டெயாருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2005 சனவரி முதல் 2010 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் மாத்தறை மாவட்ட சிறு தேயிலைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மானிய உரத்தின் அளவு வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் சிறு தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களின் வருடாந்த உற்பத்தி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

(v) உர மானியம் வழங்கப்பட்ட பின்னர் உற்பத்தி அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1540/ '11

6\.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட ஹருமல்கொடை மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும்,

(i) அந்தந்த தரங்களில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) முதலாம் தரத்துக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேற்படி பாடசாலை முன்னேற்றமடைந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அம்முன்னேற்றத்துக்கு காரணமான விடயங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?